DEPOSITION OF WITNESS

IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, KADALADI.

Case No.CC.241/2021

Prosecution witness – PW 8

| | | |
|---|---|---|
| Name | : திரு. முருகதாசன் | Caste: |
| Father's Name | : | Calling: |
| Village | : | Religion: |
| Taluk | : | Age: |

(Accused present.)
05.03.2026 at 12.15 P.M.

முதல் விசாரணை

1. நான் தற்போது திருநெல்வேலி மாவட்டம் பாளையங்கோட்டையில் காவல் துணை கண்காணிப்பாளராக பணிபுரிந்து வருகிறேன்.

2. கடந்த 17.06.2022ம் தேதி 22.00 மணிக்கு சிக்கல் காவல் நிலையப் பொறுப்பில் இருந்த போது சிக்கல் காவல் சிறப்பு சார்பு ஆய்வாளர் திரு.சிவசண்முகநாதன் அவர்கள் பதிவு செய்து வைத்திருந்த சிக்கல் காவல் நிலைய குற்ற எண்.77/2022 பிரிவுகள் 374 இ.த.ச and The bonded Labour System (abolition) Act 1976 Section 16, 17, 18 the child and Adolescent labour Prohibition and Regulation Act 1986, Section 3(1), 14, 14(a), The Juvenile Justice Care and protection children Act 2015 Section 79 ஆக வழக்கு பதிவு செய்து எனது பார்வைக்கு வைத்திருந்த முதல் தகவல் அறிக்கையை பெற்று கடந்த 18.06.2022ந் தேதி காலை 07.00 மணிக்கு சம்பவ இடம் சென்று சம்பவ சாட்சிகளான பல்தசார், சேது ஆகியோர் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகஜர் மற்றும்மாதிரி வரைபடம் தயார் செய்ததேன். அந்த பார்வை மகஜர் அ.சா.ஆ.4 ஆகும், மாதிரி வரைபடம் அ.சா.ஆ.5 ஆகும்.

3. அன்றைய தினமே பார்வை மகஜர் சாட்சிகளான பல்தசார், சேது ஆகியோர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன்.

4. அதே தினத்தில் இவ்வழக்கில் புகார்தாரரன திருமதி.சரண்யா, கிராம நிர்வாக அலுவலர் மற்றும் திரு.ஆனந்தராஜ், பெரியசாமி, வசந்தா அவர்களை சம்பவம் பற்றி விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். இவ்வழக்கில் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்த சிறப்பு சார்பு ஆய்வாளர் திரு.சிவசண்முகநாதனையும் விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன்.

5. கடந்த 19.06.2022ம் தேதி இவ்வழக்கில் பாதிக்கப்பட்ட சிறுவனான செல்வன் ராஜமாணிக்கத்தை சம்பவம் பற்றி விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன்.

6. கடந்த 20.06.2022ம்தேதி புகார்தாரரன திருமதி.சரண்யா, கிராம நிர்வாக அலுவலர் அவர்களை மீண்டும் விசாரித்து மறு வாக்குமூலம் பதிவு செய்தேன்.

7. சாட்சிகளின் வாக்குமூலங்களிலிருந்தும், எனது தனிப்பட்ட விசாரணையிலிருந்தும் பிரிவுகள் 374 இ.த.ச and The bonded Labour System (abolition) Act 1976, Section 16, 17, 18 the child and Adolescent labour Prohibition and Regulation Act, 1986, Section 3(1), 14, 14(a), The Juvenile Justice Care and protection children Act 2015 Section 79 என்பதனை பிரிவுகள் 374 இ.த.ச, Section 16, 17 and 18. The Bonded Labours System (Abolition) Act 197. Section 79 the Juvenile justice (care and protection of children Act 2015 ஆக மாற்றம் செய்து சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கை கடந்த 19.06.2022ந் தேதி தயார் செய்தேன். அந்த சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கை அ,சா.ஆ.6 ஆகும்.

8. பின்னர் எதிரியை தேடி வந்த நிலையில் எதிரி மாண்புமிகு இராமநாதபுரம் அமர்வு நீதிமன்றத்தில் Crl.M.P.No.1762/2022, தேதி 06.07.2022 ந் தேதி முன்பிணையம் பெற்றுவிட்டபடியால் அவரை கைது செய்யவில்லை.

9. அத்துடன் வழக்கு விசாரணை முடித்து எதிரி மீது பிரிவுகள் 374 இ.த.ச, Section 16, 17 and 18. The Bonded Labours System (Abolition) Act 197. Section 79 the Juvenile justice (care and protection of children Act 2015 ன் கீழ் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்தேன்.

<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u> :

1. இந்த வழக்கின் சம்பவ தேதி 17.06.2022ந் தேதி மாலை 03.00 மணி, முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தது இரவு 22.30 மணி என்றால் சரிதான். இந்த வழக்கு கோப்புகள் என்னுடைய மேற்பார்வைக்கு எடுத்தது எந்த தேதி என்றால் 18.06.2022ந் தேதி என்றால் சரிதான். மறுநாள் தான் நான் பார்வை மகஜர் மற்றும் சம்பவ சாட்சிகளை விசாரணை செய்தேன் என்றால் சரிதான். புகாரில் கிராம நிர்வாக அலுவலர் Child Help line லிருந்து வந்த அழைப்பின் பேரில் தான் புகார்தாரர் சம்பவ இடம் சென்றார் என்று கூறியுள்ளார் என்றால் சரிதான். மாவட்ட குழந்தைகள் நல வாரியத்தின் மூலம் நேரடியாக காவல் நிலையத்தில் புகார் கொடுக்கவில்லை என்றால் சரிதான். சிறுவனை நான் எந்த தேதியில் எங்கு வைத்து விசாரித்தேன் என்றால்

19.06.2022 ந் தேதிஅன்பு இல்லத்தில் வைத்து விசாரணை செய்தேன்.

2. சிறுவன் கொடுத்த வாக்குமூலத்தின் அடிப்படையில் அவருடைய உறவினர்கள் யாரையாவது விசாரணை செய்தேனா என்றால் இல்லை. மட்டியரேந்தல் கிராமத்தில் உள்ள நபர்களை சிறுவனை பற்றி அறிவதற்காக விசாரணை செய்தேனா என்றால் இல்லை. இந்த வழக்கில் தனிநபர்களை சாட்சிகளை யாரையும் விசாரணை செய்தேனா என்றால் இல்லை. இந்த வழக்கில் சாட்சிப்பட்டியலில் உள்ள நபர்கள் குழந்தைகள் நல அமைப்பில் உள்ளவர்கள் என்றால் சரிதான். பாதிக்கப்பட்ட சிறுவனை நான் அன்பு இல்லத்தில் தான் பார்த்தேன் என்றாலும் அதற்கு முன்பு அந்த சிறுவனை யார் கொண்டு வந்து இல்லத்தில் சேர்த்தார்கள் என்று எனக்கு தெரியாது என்றால் சரியல்ல. வருவாய் கோட்டாட்சியர் உத்தரவின் பேரில் அந்த சிறுவன் அன்பு இல்லத்தில் சேர்க்கப்பட்டதாக என்னுடைய விசாரணையில் தெரியவந்தது.

3. இந்த வழக்கில் வருவாய் கோட்டாட்சியரை விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்தேனா என்றால் இல்லை. புகாரில் கூறியுள்ளது போல் எதிரிக்கும் பாதிக்கப்பட்ட சிறுவனின் குடும்பத்திற்கும் இடையே கொடுத்ததாக கூறப்படும் பணத்திற்கு ஒப்பந்த ஆவணங்களை எதையும் நான் கைப்பற்றி வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். புகாரில் உள்ள விவரங்கள் தோராயமாக வழக்கிற்காக ஜோடிக்கப்பட்டது என்றால் சரியல்ல. நான் சொல்வது போல் சம்பவ இடத்தில் எந்த சம்பவமும் நடைபெறவில்லை என்றாலும் கிராம நிர்வாக அலுவலருக்கு கிடைத்த தவறான தகவலின் பேரில் வழக்கு பதிவு செய்யப்பட்டது என்றால் சரியல்ல. நான் சரிவர புலன் விசாணை செய்யாமல் எதிரி மீது குற்ற இறுதி அறிக்கை தாக்கல்செய்துள்ளேன் என்றால் சரியல்ல. எதிரிக்கும், இந்த வழக்கிற்கும் சம்மந்தம் இல்லை என்று சொன்னால் சரியல்ல.

SADHU SIVA SUBRAMANIAN

Digitally signed by SADHU SIVA SUBRAMANIAN
Date: 2026.03.05 18:46:20 +0530